Arimaa Nokku

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

16: 2 ஜூலை 2022



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

அரிமா நோக்கு
16 : 2 ஜூலை 2022

கவிதை வாசிப்பும் உணர்ச்சி அனுபவமும்
– வ. ஜெயதேவன் 03
சங்க இலக்கியக் கட்டமைப்பில் தொல்காப்பிய இளமைப் பெயர்கள்
– கி. சங்கர நாராயணன் 05
சொற்பொழிவுக் கோட்பாடுகள்
– பி. பூவிளங்கோதை 09
நற்றிணையில் ஔவையின் உளவியல்
– கி. காவேரி 14
தத்துவப் பார்வையில் திருவெம்பாவை
– கா. செல்லப்பன் 18
புள்ளிங்கோ
– கோ. பழனிராஜன் 22
உருதுக் கவிக்குயில் மிர்ஸா காலிப்
– மு. அருணாசலம் 27
Mystique Marriages of Patriarchal Women: A Reading of Adichie's Americanah
– Anu Bharathi P 36
சங்க கால ஆடைத்தொழில்
– அ. ஜெயக்குமார் 41
பெண்ணியம் பேசிய முதல் பெருந்தகை
– சே. செந்தமிழ்ப்பாவை 45
பிரான்சிஸ் தாம்சன்
– ஏ.வி.எம். நஸீமுத்தீன் 49
தொல்காப்பிய முரண்தொடையும் புதுக்கவிதையும்
– கி. ஷர்மிளா 52
தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடித் தொகுப்பில் தொல்காப்பியச் சுவடிகள்
– மு. மோகனவட்சுமி 56
தொல்காப்பியரின் கலைச்சொற்கள்: பயன்பாட்டு நுணுக்கம்
– எல். இராமமூர்த்தி 60
தொல்காப்பியம், அகநானூற்றில் விருந்தோம்பல்
– ந. மாலதி 64

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## தமிழ்க் கவிஞர் நாள்

தாய்மொழியான நம் தமிழ்மொழிக்குப் பல்வேறு கோணங்களில் திட்டமிட்டு மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு செயற்பட்டு வருகிறது. கடந்த ஏப்ரல் திங்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாளான 29ஆம் நாளை இவ்வாண்டு முதல், தமிழ்க் கவிஞர் நாளாகத் தமிழக அரசு விழாவெடுத்துக் கொண்டாடும் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

பொருளாதார வளத்தைத் தன்முகமாக உலகில் நிறுவிக்கொண்ட அமெரிக்கா கவிதைக்குத் தருகிற வரவேற்பும் வாய்ப்பும் நமக்கு வியப்பளிப்பதாக உள்ளது. ஏப்ரல் திங்களையே அந்நாடு கவிதைத் திங்களாகச் சிறப்பித்துக் கொண்டாடுகிறது.

பாரதிதாசன் பிறந்ததும் இறந்ததும் ஏப்ரல் திங்களில் என்று நாம் அறிவோம். அதனால் ஏப்ரல் திங்களையே ஏன் நாம் கவிஞர் திங்களாகக் கொண்டாடக்கூடாது என்று ஆசையில் தழைத்த எண்ணம் தோன்றுகிறது.

அமெரிக்காவில் 1988முதலாக ஒவ்வோர் ஆண்டும் தலைசிறந்த கவிதைகளைத் தேர்தெடுத்துத் தொகுத்துத் தக்க முன்னுரைகளோடு வெளியிடுகிறார்கள். ஒவ்வோராண்டும் அமெரிக்காவில் நடைபெறும் கவிதை நிகழ்ச்சிகளை முன்கூட்டியே தொகுத்து நாட்காட்டிகள் வெளியிடுகின்றனர். அதற்குத் தேவையான பணத்தைக் கவிதை விளையாட்டுப் போட்டிகள் (Poetry Game Show) நடத்தித் திரட்டுகின்றனர். எங்கு எந்த நாளில் எந்த நேரத்தில் யார் கவிதையை நிகழ்த்துகலையாக வழங்குவார் என்பதை நாட்காட்டிமூலம் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது.

இங்கிலாந்திலும் கவிதை நிகழ்ச்சிகளை அமைத்துக் கொடுத்துக் கவிஞர்களுக்கும் நுகர்வாளர்க்கும் உதவவும், மற்றும் கவிதை, கவிஞர் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் தேசியக் கவிதைத் தலைமைச் செயலகம் (National Poetry Secretariat) உருவாக்கினார்கள்.

ஜப்பானில் ஒரு காலத்தில் அரசாங்கமே ஆதரிக்க வேண்டிய, கவனிக்க வேண்டிய இன்றியமையா நடவடிக்கையாகக் கவிதை கருதப்பட்டது. அதற்காக ஒர் அமைச்சர் பதவியே உண்டாக்கப்பட்டது. ஆனால் அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்பட்ட விவாதங்களும் பேச்சுகளும் கல்வி, தொழில், மருத்துவம் போன்றவற்றையெல்லாம் ஓரம் கட்டிவிட்டன. கல்வி அமைச்சர் பதவியை நீக்கிவிட்டனர். ஆனால் அங்கு முதியோர் இல்லங்களில் ஹைக்கூ எழுதுகின்றனர். அவர்கள் மனத்தில் கவிதை உணர்வு ஊக்கம் பெறவும், புதிய படிமங்கள் கிடைக்கவும் வாயப்பாக அவ்வப்போது அம்முதியவர்களை இயற்கை வளமும்

ISSN 2320-4842

அழகும் மிக்க இடங்களுக்கு அழைத்துப் போகின்றனர்.

1994இல் எழுத்தாளர் பெருநிறுவனம், அமெரிக்காவில் மூன்று பெரு நகராங்களான சான்பிரான் சிஸ்கோ, வாசிங்டன் டி.சி. + பிரானக்ஸ், நியூயாரக் ஆகியவற்றில் உருவாக்கப்பட்டதன் பயனாக, ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கும் பதின்ம வயதினர்க்கும் எழுத்தின் மூலம் தாங்கள் படைப்புத் திறனை வெளிப்படுத்தவும் வளர்த்துக்கொள்ளவும் வாய்ப்பு நேர்ந்துள்ளது. இத்தகைய இளையவர்களின் படைப்புகளைத் தொகுத்து அந்நிறுவனமே (Writers' Corps) வெளியிடுகிறது.

கவிதைக்கு வயதில்லை என்று அதை வாழ்க்கையோடு உடன்வரு பயணியாக ஏற்றுக்கொள்ளும் தனிச்சிறப்பை உணராதவர்கள் அல்லர் தமிழர்.

❖

*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் உறுப்பினர் | ரூ. 3500/- | US | $ 150 |
| புரவலர் | ரூ. 5000/- | US | $ 200 |
| பெரும்புரவலர் | ரூ. 10,000/- | US | $ 500 |
| மீப்பெரும் புரவலர் | ரூ. 20,000 | US | $ 1000 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 15,000/- | US | $ 700 |

### விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000/- |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000/- |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000/- |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500/- |